இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“நீங்கள் அனைவரும் என்னைப்போல் வாழுங்கள். நாங்கள் உங்களுக்குக் காட்டிய முன்மாதிரியின்படி வாழ்பவர்களைப் பின்பற்றுங்கள். கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவர்களாய் நடப்போர் பலர் உள்ளனர். அவர்களைப்பற்றி மீண்டும் மீண்டும் உங்களிடம் கூறியுள்ளேன். இப்பொழுதும் கண்ணீரோடு சொல்கிறேன். அழிவே அவர்கள் முடிவு; வயிறே அவர்கள் தெய்வம்; மானக்கேடே அவர்கள் பெருமை; அவர்கள் எண்ணுவதெல்லாம் மண்ணுலகைச் சார்ந்தவை பற்றியே” (பிலி 3:17-19)



# தவக்காலம் என்பது நமது பலவீனத்தை ஏற்றுக்கொள்ள தூண்டும் ஒரு காலம்

இயேசு கிறிஸ்துவின் மீதான எதிர்நோக்கு, நம்மை பலவீனம், அச்சம் மற்றும் வாழ்க்கையின் அவநம்பிக்கை பற்றிய பயங்களை வெல்லும் என்பதை தவக்கால பயணம் திருஅவைக்கு நினைவூட்டுகிறது என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

“சாம்பல் மற்றும் மண்ணால் ஆன நாம், நோய், வறுமை மற்றும் நமக்கும் நம் குடும்பங்களுக்கும் திடீரென ஏற்படக்கூடிய துன்பங்கள் மூலம் பலவீனத்தை அனுபவிக்கிறோம்,” என்று போப் விபூதி புதனன்று தயாரிக்கப்பட்ட அவரது மறையுரையில் கூறினார்.

“எனினும், தவக்காலம் நமது நம்பிக்கையை மீண்டும் தூண்டுவதற்கான அழைப்பாகும்,” என்று அவர் எடுத்துரைத்தார். “பாவம் மற்றும் மரணத்தின் சாம்பலில் இருந்து நிலைவாழ்வுக்கான மாட்சியில் நம்மைக் கொண்டு சேர்க்கும் நோக்கில் நம் கண்களை உயர்த்த அழைக்கப்படுகிறோம” அவர் மேலும் அறிவுறுத்தினார்.

திருத்தந்தை ஜெமெல்லி மருத்துவமனையில் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார். அவரால், திருநீற்று புதனன்று உரோமையில் புனித சபீனா பசிலிக்காவில் நடைபெற்ற திருப்பலியில் கலந்து கொள்ள முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"விபூதி புதன் அன்று நெற்றியில் பூசப்படும் சாம்பல் நாம் தூசிக்குச் சமம் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது, ஆனாலும் அது நாம் அழைக்கப்பட்டுள்ள எதிர்நோக்குப் பயணத்தை நம்மில் ஆழப்படுத்துகிறது என்று கர்தினால் ஏஞ்சலோ டி டோனாடிஸ் திருத்தந்தையின் உரையைப் படித்து விவரித்தார். இயேசு மண்ணுலகத்திற்கு இறங்கினார், மேலும், அவரது உயிர்த்தெழுதலால், நம்மைத் தம்முடன் தந்தையின் இதயத்திற்குள் இழுத்தார் என்று மேலும் கூறினார்.

போர், சமூக எதிர்ப்பு, அதிகார தன்னலப்போக்கு மற்றும் சுரண்டல் உள்ளிட்ட “நமது காலத்தின் சமூக மற்றும் அரசியல் சூழலை ” ஒப்புக்கொண்ட 88 வயதான திருஅவைத் தலைவர், உலகின் பிரச்சினைகள் மக்களை ஒன்றிணைக்கவும், ஒருவருக்கொருவர் ஏற்றுக்கொள்வும், அமைதி மற்றும் நல்லிணக்கத்தை விரும்பும் நமது கடவுளிடம் திரும்பவும் தூண்ட வேண்டும் என்றார்.

“கடவுளிடம் திரும்புவோம், நம் முழு இருதயத்தோடும் அவரிடம் திரும்புவோம்,” என்று திருத்தந்தை அறைகூல் விடுத்தார். “தானம் செய்வதிலிருந்து நம்மைத் தாண்டிச் செல்லவும், ஒருவருக்கொருவர் தேவைகளைப் பகிர்ந்து கொள்ளவும், நியாயமான உலகத்திற்கான எதிர்நோக்கை வளர்க்கவும் கற்றுக்கொள்வோம்” என்றார்.

"நம் இதயங்களில் இந்த எதிர்நோக்குடன், நமது பயணத்தைத் தொடங்குவோம். கடவுளுடன் சமரசம் செய்வோம்" என்று மார்ச் 5 ஆம் தேதி தனது மறையுரையின் முடிவில் திருத்த்ந்தை மீண்டும் வலியுறுத்தினார்.
திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல் நிலை சீராக இருப்பதாகவும், செயற்கை சுவாசம் வழங்கும் சிகிச்சை முறைக்கு அவசியம் இல்லாதிருப்பதாகவும் திருப்பீடத் தகவல் தொடர்புத்துறை தெரிவித்துள்ளது.
இந்தத் தவக்காலத்தில் கடவுளின் அருளின் உதவியுடன், இயற்கையை நமது பேராசை சுரண்டலில் இருந்து விடுவிப்பதற்காக, நாம் அனைவரும் நமது நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் மாற்றுவோம் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

சுற்றுச்சூழல் நெருக்கடியை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசரத் தேவையை தனது கடிதத்தில் எடுத்துக்காட்டியுள்ள திருத்தந்தை, *Laudato si’*, *Laudate Deum* ஆகிய தனது திருமடல்களில் தான் வலியுறுத்தியுள்ளபடி, சுற்றுச்சூழலை நோக்கிய அணுகுமுறைகளில் மாற்றம் காணவும் அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

## தம்பினில் 50 ஆண்டு திருமண பொன் விழா கொண்டாட்டம்

தம்பின்: கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் தலைமையில் இங்குள்ள புனித ஜோன் மரி வியான்னி ஆலயத்தில் 14 தம்பதிகளின் 50 ஆம் ஆண்டு திருமண பொன் விழா திருப்பலி கொண்டாடப்பட்டது. பங்குத் தந்தை அருள்பணி ஆல்பர்ட் ஆரோக்கியசாமி அவர்களின் முயற்சியில் இப்பங்கைச் சேர்ந்த சுற்றுவட்டாரங்களான பாகாவ், கோல பில்லா, கெமெஞ்சே, கெட்கோ, கெமாஸ் போன்ற இடங்களில இருந்து இத்தம்பதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் தங்களின் 67-ம் ஆண்டு திருமண நாளை கொண்டாடிய தம்பதியரும் அடங்குவர்.

திருப்பலியின்போது, இத்தம்பதியர் மகிழ்வுடன் தங்களது திருமண வாக்குறுதியைப்



தம்பதியினர் சிலருடன் பேராயர் ஜூலியன் மற்றும் அருள்பணி ஆர்பர்ட் ஆரோக்கியசாமி

புதுப்பித்துக் கொண்டனர். பின்னர் சிறப்பு விருந்துவசரிப்பும் வாழ்த்து சான்றிதழும் தம்பதியினருக்கு வழங்கப் பட்டது.

## 2025, யூபிலி ஆண்டுக்கான இறைவேண்டல் எதிர்நோக்கின் திருப்பயணிகள்

விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரனுமான
இயேசு கிறிஸ்துவில் நீர் எங்களுக்கு
வழங்கிய நம்பிக்கைக்கும் தூய ஆவியார்
வழியாக எங்கள் இதயங்களில் நீர்
பற்றியெரியச் செய்தப் பிறர் அன்புச்
சுடரும், உமது அரசின் வருகைக்கான
எதிர்நோக்கை எங்களில் தட்டி
எழுப்புவனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும்
வளர்த்தெடுக்கும் நல்லோராய் உம்
அருள் எம்மை மாற்றுவதாக! தீமையின்
ஆற்றல்கள் மறைந்து உம் மாட்சி
நீடித்து ஒளிரும் பொருட்டு மானிட
உள்ளங்கள் புதிய விண்ணகம் புதிய
மண்ணகம் நோக்கிய காத்திருத்தலில்
மாற்றம் பெறுவனவாக!

யூபிலி கொண்டாட்டத்தின் அருள்
விண்ணக வாழ்வுக்கான ஆர்வத்தை
`எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய'
எம்மில் தூண்டி எழுப்புவதாக! அதே
அருள் எம் மீட்பின் மகிழ்ச்சியையும்
அமைதியையும் அகிலமெங்கும்
அளிப்பதாக!

என்றென்றும் போற்றற்குரிய எம்
கடவுளாகிய உமக்கே மாட்சியும்
புகழும் இன்றும் என்றும் உரித்தாகுக.

ஆமென்.

# திருஅவையில் யூபிலி ஆண்டு 2025 - சிறப்பு ஆணைமடல் (எண் 18)

நம்பிக்கை, அன்பு ஆகியவற்றோடு இணைந்து எதிர்நோக்கானது, கிறிஸ்தவ வாழ்க்கையின் சாராம்சத்தை வெளிப்படுத்துகின்றது. இறையியல் நற்பண்புகளின் முக்கோணத்தை உருவாக்குகின்றது. அவற்றின் பிரிக்க முடியாத பரிமாணத்தில், எதிர்நோக்கு என்பது, அடிப்படைப் பயிற்சியை மனதில் பதிக்கிறது, இருப்பின் திசையையும் நோக்கத்தையும் குறிக்கிறது.




எனவே தான், திருத்தூதர் பவுல், "எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள்; துன்பத்தில் தளரா மனத்துடன் இருங்கள்; இறைவேண்டலில் நிலைத்திருங்கள்" (உரோ 12:12) என்று அழைக்கிறார். ஆம், நாம் எதிர்நோக்கினை மிகுதியாகப் பெற வேண்டும். நம் இதயங்களில் நாம் சுமந்து செல்லும் நம்பிக்கைக்கும், அன்பிற்கும், நம்பகத்தன்மையுடனும் கவரும் தன்மையுடனும் சான்று பகரவேண்டும்.

இதனால் நமது நம்பிக்கை மகிழ்ச்சியாகவும், பிறரன்பு செயல்கள் ஆர்வம் ஊட்டக்கூடியதாகவும் இருக்கும். இதனால் அனைவரும் ஒரு புன்னகையை, நட்பின் சைகையை, உடன்பிறந்த உணர்வுடன் கூடிய பார்வையை, நேர்மையான செவிசாய்ப்பை, இலவச பணியை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியும். எதிர்நோக்கின் சிறிய விதையை இயேசுவின் ஆவியில் பெற்றுக்கொள்பவர்களுக்கு இச்செயல்களை எளிதில் ஆற்றமுடியும்.

நமது எதிர்நோக்கின் அடித்தளம் என்ன? அதைப் புரிந்துகொள்ள, நமது நம்பிக்கைக்கான காரணங்களைப் பற்றி சிந்திப்பது நல்லது. "உங்கள் உள்ளத்தில் கிறிஸ்துவை ஆண்டவராகக் கொண்டு அவரைத் தூயவரெனப் போற்றுங்கள். நீங்கள் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து யாராவது விளக்கம் கேட்டால் விடையளிக்க நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருங்கள்" (1பேதுரு 3:15).

# உலகளாவிய மொழியாகிய கலையின் முக்கியத்துவத்தை நினைவுகூரும் திருத்தந்தை

பிப்ரவரி 16, ஞாயிற்றுக்கிழமை, வழக்கமாக வத்திக்கானில் மூவேளை செப உரை வழங்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உடல்நலமின்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதால் தனது கருத்துக்களை திருப்பீடச் செய்தியகத்திற்கு வழங்கியுள்ளார், அதன்பின் உலகளாவிய மொழியாகிய கலையின் முக்கியத்துவத்தை நினைவுகூரவும், அதன் அழகை மக்களிடத்தில் பரவச் செய்து, அவர்களை ஒன்றிணைத்து, உலகிற்கு நல்லிணக்கத்தைக் கொண்டு வரவும், கலை மற்றும் கலாச்சார விழா சிறப்பிக்கப்பட்டிருப்பதால் தன்னால் இவ்விழாவில் பங்கேற்க இயலவில்லை என்றும் அச்செய்தியில் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

போரினால் துன்புறும் மக்கள் அனைவரையும் நினைவுகூர்ந்து செபிப்பதை தனது வழக்கமாகக் கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், துன்புறும் உக்ரைன், பாலஸ்தீனம், இஸ்ரயேல், மத்திய கிழக்கு, மியான்மர், கிவ், சூடான் பகுதியில் வாழும் மக்கள் அனைவருக்கும் அமைதி கிடைக்க, அமைதிக்காக தொடர்ந்து செபிப்போம்




படுகின்றது என்று தனது மூவேளை செப உரைக் கருத்தில் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பிப்ரவரி 15, சனிக்கிழமை முதல் வத்திக்கானில் சிறப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கலை மற்றும் கலாச்சார விழாவை முன்னிட்டு இவ்விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள திருத்தந்தை அவர்கள், கலை மற்றும் கலாச்சாரங்கள், போரின் அழுகையை அமைதிப்படுத்த உதவுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்விழாவின் போது கலைஞர்கள் அனைவருடனும் இருக்க வேண்டும் என்று தான் விரும்பியதாகவும், மூச்சுக்குழல் அழற்சி நோய் சிகிச்சைக்காக ஜெமெல்லி மருத்துவமனையில் அனுமதிக்

என்று அழைப்புவிடுத்துள்ளார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தன் மேல் அன்பு கொண்டு, உடல்நலனுக்காக செபிக்கும் அனைவருடனும் தனது ஆன்மிக நெருக்கத்தை வெளிப்படுத்தி நன்றி தெரிவித்துள்ள திருத்தந்தை அவர்கள், ஜெமெல்லி மருத்துவமனையில் தன்னை கவனமுடன் பாதுகாக்கும் மருத்துவர்கள், நலவாழ்வுப் பணியாளர்கள் அனைவருக்கும் தனது நன்றியினைத் தெரிவித்து, அவர்களது மதிப்புமிக்க மற்றும் மிகவும் கடினமான பணிக்காக செபத்தின் வழியாக அவர்களுக்கு உடனிருப்பை அளிப்போம் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# சாகா சிற்றாலயத்தில் புனித லூர்து அன்னைத் திருவிழா

சிரம்பான்: இங்கு, சாகா பகுதியில் அமைந்துள்ள புனித லூர்து அன்னை சிற்றாலயத்தின் ஆண்டு திருவிழா கடந்த பிப்ரவரி 8 முதல் 16 வரை, ஒன்பது நாள் சிறப்பாகக் கொண்டாட்டமாகக் கொண்டாடப்பட்டது. இந்நாள்களில் ஒவ்வொரு நாளும் நவநாள் இறைவேண்டல்களுடன் சிறப்பு திருப்பலிகளும் கொண்டாடப்பட்டன. ஒவ்வொரு நாளின் மறையுரைகள் அறிவுக்கும் நம்பிக்கை வாழ்வுக்கும் அருமருந்தாக இருந்தன என பலர் கருதுரைத்தனர். ஆண்டு திருவிழா சிறப்புற கொண்டாட உதவிகளும், நன்கொடைகளும் அளித்த அனைவருக்கும் பங்குத் தந்தை நன்றி கூறினார். அன்னை மரியின் ஆசீரைப் பெற்று விழாவுக்கு வருகைத் தந்தை அனைவரும் மகிழ்வுடன் இல்லம் திரும்பினர்.

லூர்து அன்னை என்ற பெயர், ஃபிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் 1858ம் ஆண்டு, ஃபெப்ரவரி மாதம், 11ம் நாள் முதல், 1858ம் ஆண்டு, ஜூலை மாதம், 16ம் நாள் வரை "பெர்னதெத் சூபிரஸ்" (Bernadette Soubirous) என்ற சிறுமிக்கு அன்னை மரியாள் அளித்த திருக்காட்சியின் அடிப்படையில் அவருக்கு வழங்கப்படுகின்ற பெயராகும். இந்த உலகின் பல்வேறு இடங்களில் மரியன்னை அளித்த சிறப்பு வாய்ந்த திருக்காட்சிகளில் ஒன்றாக லூர்து நகர் திருக்காட்சியும் விளங்குகிறது. லூர்து அன்னையின் திருவிழா ஃபெப்ரவரி 11ம் தேதி கொண்டாடப்படுகிறது.

# ஆண்டவரோடு உள்ள உறவில் நிலைத்திருப்போம்

தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமையில் இருக்கும் நமக்கு இன்றைய நாள் வாசகங்கள் நமக்குத் தரும் சிந்தனை "பாடுகளின் வழியாகப் விண்ணகம்" என்பதாகும். அதாவது சிலுவைச்சாவின் வழியேதான் நமக்கு மீட்பு உண்டு என்பதே இன்றைய வாசகங்களின் சாராம்சமாக இருக்கிறது. நற்செய்தி வாசகத்திலே ஆண்டவர் இயேசு உருமாற்றம் அடைகின்றார். அதில் மோசேயும், இறைவாக்கினர் எலியாவும் உடன் இருக்கிறார்கள். எருசலேமில் இயேசு மூப்பர்கள் மற்றும் மறைநூல் அறிஞர்கள் கையில் ஒப்புவிக்கப்பட்டு, கொலை செய்யப்படவும், மூன்றாம் நாளில் மாட்சியுடன் உயிர்த்தெழுவதன் முன் அடையாளமாக இந்த உருமாற்ற நிகழ்வு இருக்கிறது.

நாம் இயேசுவின் உருமாற்றத்தையும், அது உணர்த்தும் 'பாடுகளின் வழியே மீட்பு உண்டு' என்று உண்மையையும் புரிந்து கொள்ள வேண்டும். இயேசு சாவைத் துணிவுடன் ஏற்றுக்கொண்டார். தன்னைப் பின்தொடர்ந்து வரும் சீடர்களும் சிலுவையைத் தூக்கிக்கொண்டு வரவேண்டும் என்கிறார்.

பிலிப்பியருக்கு எழுத்தப்பட்ட திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில் பவுலடியார் கூறுவார், "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவர்களாய் நடப்போர் பலர் உள்ளனர்" என்று. ஆம், துன்பமில்லா, இன்பமான வாழ்வு வாழ நினைக்கும் ஒவ்வொருவரும்; பிறர்நலத்தை நாடாமல், தன்னலச் சேற்றில் மூழ்கிக் கிடக்கும் ஒவ்வொருவரும்; இந்த மண்ணுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுபவர்கள் யாவருமே இயேசுவின் சிலுவைக்கு பகைவர்கள்தான். ஏனெனில் சிலுவை மண்ணுலகு சார்ந்தவற்றை அல்ல விண்ணுலகு சார்ந்த காரியங்களையே நமக்கு நினைவூட்டுகிறது.

அடுத்ததாக நாம் இயேசுவின் பாடுகளின் வழியில் நடப்பதோடு மட்டுமல்லாமல், அவரோடு நல்லுறவு ஏற்படுத்திக்கொள்ள முன்வரவேண்டும். இரண்டாம் வாசகத்தில் பவுலடியார் கூறுகிறார், "ஆண்டவரோடு உள்ள உறவில் நிலைத்திருக்கள்" என்று. இந்த தவக்காலத்திலே ஆண்டவருக்கும், நமக்கும் உள்ள உறவில் நிலைத்திருப்பது மிகவும் சாலச் சிறந்த ஒன்றாகும்.

இந்த தவக்காலத்தில் ஆபிரகாம் எப்படி ஆண்டவரோடு உள்ள உறவில் நிலைத்திருந்தாரோ அதுபோன்று நாமும் நமது நம்பிக்கையால், கீழ்படிதலுள்ள வாழ்வால் நல்லுறவில் நிலைத்திருப்போம். அத்தோடு இயேசுவைப் போன்று நமது வாழ்வில் வரும் துன்பங்களை, பாடுகளை துணிவுடன் ஏற்றுக்கொள்வோம். அதன் வழியாக இறையருளை நிறைவாய் பெறுவோம்.

### தவக்காலம் 2-ம் ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம் | தொ.நூ. 15:5-12,17-18,21b |
| திரு.பாடல் | 27:1.7-8.9abc.13-14 |
| 2 வாசகம் | பில 3: 17;34]1 |
| நற்செய்தி | லூக்கா 9: 28b-36 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை: வாரம் 2**